## தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

## தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

## பெரம்பலூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(27.02.2024 முதல் 03.03.2024)

**அறிக்கைஎண்: 17/2024** **தேதி : 27.02.2024**

### பெரம்பலூர் மாவட்டத்தின் கடந்தவாரவானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 35 - 38 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 24 - 26 °செ ஆகவும் பதிவானது.

### பெரம்பலூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (28.02.2024 முதல் 03.03.2024).

| கடந்த வார வானிலை (23.02.2024 முதல் 26.02.2024) | | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு (28.02.2024 முதல் 03.03.2024) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 23/02 | நாள்-2 24/02 | நாள்-3 25/02 | நாள்-4 26/02 | தேதி | நாள்-1 28/02 | நாள்-2 29/02 | நாள்-3 01/03 | நாள்-4 02/03 | நாள்-5 03/03 |
| 0 | 0 | 0 | 0 | மழை (மி.மீ.) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 37 | 38 | 36 | 35 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 35 | 36 | 37 | 37 | 37 |
| 25 | 26 | 24 | 24 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 24 | 25 | 25 | 26 | 26 |
| 5 | 5 | 5 | 6 | மேகமூட்டம் (ஆக்டா) | 4 | 4 | 5 | 3 | 3 |
| 85-51 | 80-53 | 78-51 | 83-48 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90-30 | 80-30 | 80-30 | 80-30 | 90-20 |
| 15 | 13 | 13 | 17 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 14 | 12 | 12 | 10 | 8 |
| கிழக்கு | கிழக்கு தென் கிழக்கு | கிழக்கு வட கிழக்கு | கிழக்கு வட கிழக்கு | காற்றின் திசை | வட கிழக்கு | வட கிழக்கு | கிழக்கு வட கிழக்கு | கிழக்கு வட கிழக்கு | கிழக்கு |

### பெரம்பலூர் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் தெளிவாக காணப்படும். 28.02.2024 மற்றும் 03.03.2024 ஆகிய தினங்களில் மழை இல்லை. அதிகபட்ச வெப்பநிலை 35 - 37 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 24 - 26 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 80 - 90 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 20 - 30 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 8 – 14 கி.மீ. என்ற அளவுக்கு பெரும்பாலும் வட கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

### வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| எள் | விதைப்பு | மாசிப்பட்டத்தில் எள் விதைப்பதற்கு திண்டிவனம் 4, திண்டிவனம் 7 மற்றும் விருத்தாசலம் 1 ரகங்கள் ஏற்றவை. |

| | | |
|---|---|---|
| நெல் தரிசு | உளுந்து | நெல் தரிசு பயறுவகைப் பயிர்களுக்கு பூக்கும் தருணத்திலும், அடுத்து 15 நாட்கள் இடைவெளியிலும் டிஏபி (2 சதம்) + முரியேட் ஆப் பொட்டாஷ் (1 சதம்) கரைசலை காலை அல்லது மாலை நேரங்களில் கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்கவும். டிஏபி கரைசலுக்கு பதிலாக ''பயறு அதிசயம்'' எக்டருக்கு 5.0 கிலோ என்ற அளவில் மொட்டு வைக்கும் தருணத்தில் கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்க வேண்டும் |
| நெல் தரிசு | உளுந்து | நெல் தரிசு உளுந்து பயிரில் அதிக பனி மூட்டத்தின் காரணமாக சாம்பல் நோய் தாக்குதல் காணப்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு கார்பன்டெசிம் 100 கிராம் அல்லது நனையும் கந்தகத்தூள் 1 கிலோ கைத்தெளிப்பான் கொண்டு காலை அல்லது மாலை வேளைகளில் தெளிக்கவும். |
| கால்நடைகளுக்கு | மாடு | அடுத்த சில தினங்களுக்கு பகல் நேர வெப்ப நிலை அதிகரிக்க வாய்ப்புள்ளதால் தங்களின் கால்நடைகளை காலை மற்றும் மாலை வேளைகளில் மேய விடுவதுடன் நண்பகல் நேரத்தில் நிழல் பகுதியில் நிறுத்தி வைக்கவும். |

## குறுஞ்செய்தி

மாசிப்பட்டத்தில் எள் விதைப்பதற்கு திண்டிவனம் 4, திண்டிவனம் 7 மற்றும் விருத்தாசலம் 1 ரகங்கள் ஏற்றவை.

**இயக்குநர்**